தினமலர்
உண்மையின் உரைகல்
DINAMALAR
National Tamil Daily

# விதை அறிவியல், டெக்னாலஜி செயலி வெளியீடு

**கோவை, டிச. 3–**

வன மரபியல் மற்றும் மரப்பெருக்கு நிறுவனத்தின் (ஐ.எப்.ஜி.டி.பி.,) சுற்றுச்சூழல் தகவல்பரப்பு மையம் சார்பில், வன விதை அறிவியல், தொழில்நுட்பம் எனும் மொபைல் செயலி உருவாக்கப்பட்டுள்ளது.

விதை கையாளும் நுட்பங்கள் மற்றும், 100க்கும் மேற்பட்ட வன இனங்களுக்கு பயனுள்ள தகவல்கள், விதைகளின் சேகரிப்பு மற்றும் கையாளுதல் முறைகள் தொகுக்கப்பட்டுள்ளன.

விதை சேகரிப்பு, விதைகளை பதப்படுத்துதல், சேமிப்பு, சோதனை, செயலற்ற நிலையை உடைத்தல் மற்றும் அந்தந்த இனங்களின் முளைப்பை அதிகரிக்க, விதை நேர்த்தியின் பல்வேறு முறைகள், இந்த மொபைல் செயலியில் விவரிக்கப்பட்டுள்ளன.

டேராடூன் இந்திய வனவியல் ஆராய்ச்சி, கல்வி கவுன்சில், டைரக்டர் ஜெனரல் ஸ்ரீஅருண் சிங் ராவத், இந்த ஆண்ட்ராய்டு மொபைல் செயலியை அறிமுகப்படுத்தினார். முதன்மை விஞ்ஞானி கண்ணன் வாரியர், மொபைல் செயலியின் முக்கிய அம்சங்களை விளக்கினார்.

ஐ.எப்.ஜி.டி.பி., இயக்குனர் குன்னிகண்ணன், ஆராய்ச்சி குழு ஒருங்கிணைப்பாளர் யசோதா, மலேசியா பல்லுயிர் பன்முகத்தன்மை இன்டர்நேஷனல் கூட்டணியின் ரினா ஐலோனென் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

66. News in Dinamalar, Coimbatore, 04.12.2022, Release of the Mobile App, Forest Seed Science and Technology by IFGTB ENVIS.